தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர் – 5 திருவள்ளுவராண்டு 2017 ஐப்பசி 28 14–11–1986 இதழ் 8

இணைவேந்தர்



தமிழ்நாடு அமைச்சரவையின் கல்வியமைச்சராக மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கள் பொறுப்பேற்று இருப்பதன் மூலமாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இணைவேந்தராகிறார்கள்.

திருமிகு பக்தவத்சலனார் அறக்கட்டளை

முன்னாள் தமிழக முதலமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்களது 90–ஆவது பிறந்தநாள் விழாவின் போது இன்றைய தமிழக முதலமைச்சர் திருமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் உருவா 90,000 வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அத்தொகையினை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களுக்குப் பிரித்து வழங்கி, மூன்று அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்கள் எனத் தெரிகிறது. 'ஆலயங்களும் நமது பண்பாடும்' என்ற பொருள் பற்றி ஆய்வதற்கென ஓர் அறக்கட்டளையினை அமைக்குமாறு உருவா 30,000ஐ தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு அவர்கள் வழங்கியுள்ளார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மேலும் பல்லாண்டு உடல் நலத்தோடு வாழத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வாழ்த்துகிறது.

33–ஆவது அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாடு

33–ஆவது அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாடு 24–10–'86 முதல் 26–10–'86 வரை கல்கத்தாவில் நடைபெற்றது. பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவன மதிப்புறு தலைவர் பேராசிரியர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் பொதுத் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. மேற்கு வங்க அரசின் முதலமைச்சர் மாண்புமிகு சோதிபாசு அவர்களால் தொடங்கிவைக்கப்பெற்றது. மேற்கு வங்க அரசின் உயர் கல்வியமைச்சர் மாண்புமிகு நிர்மல்பாசு அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றினார்.

நன்றி –டி. எல். ஏ. நவம்பர், 1986
திருவனந்தபுரம்.

அறுபத்திரண்டு மொழி அகராதி

வித்துவான் சி. எஸ். முட்டத்துப்பாடம் பன்மொழி அகராதி ஒன்றினை உருவாக்கியுள்ளார். இவ்வகராதி அறுபத்திரண்டு இந்திய மற்றும் அயல்நாட்டு மொழிகளடங்கிய குறிப்பிடத்தக்க அகராதியாகும். இதன் வெளியீடு அண்மையில் கேரளாவிலுள்ள எர்ணாகுளம் சமஸ்தா கேரள சாகித்திய பரிசத் கூடத்தில் நடைபெற்றது.

நன்றி – டி. எல். ஏ. நவம்பர், 1986,
திருவனந்தபுரம்.

திருமங்கை ஆழ்வார் தந்த சொல்

'திருவாளர்' என்ற சொல்லை மதிப்பு அடைமொழியாக இடுகிறோம். திருமங்கை ஆழ்வார் திருமாலைக் குறிக்க, 'திருவாளன்' என்ற சொல்லை முதன்முதலில் தந்தார்:

"ஒலிதிரைநீர்ப் பௌவங்கொண்ட திருவாளன்"
–பெரிய திருமொழி 5:5:1

சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் தேவார மூவர் புராணங்களில் 'திருவாளன்' என்ற சொல்லை மூன்று இடங்களில் சிவபெருமானைக் குறிக்கவும், ஓரிடத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிக்கவும் கையாண்டுள்ளார்.

–கோவை. இளஞ்சேரன்.

நாடகப் பயிற்சிப் பட்டறை நிறைவு விழா

பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையுடன் தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறை ஏற்று நடத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கான ஒரு மாத கால நாடகப் பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா 18-10-'86 அன்று மாலை 6-00 மணியில் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் உள்ள ஆடல் வல்லான் திறந்த வெளிக் கலையரங்கில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர.ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையில் பாரதிக் கலைஞர் திரு எ.ஃச்.வி.சகசரநாமம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பயிற்சி பெற்ற கல்லூரி ஆசிரியர்களின் சார்பில் பேசிய பேரா.பொன்முத்தையன் அவர்களும்,பேராசிரியை செல்வி லீலா அவர்களும் பன்முக நாடகப் பயிற்சியால் தாங்கள் பெரும்பயன் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டனர்.

இப்பட்டறையின் இயக்குநரும் நாடகத்துறைப் பேராசிரியருமாகிய பேரா.சே.இராமானுசம் அவர்களின் வரவேற்புரையுடனும், கலைப்புலத் தலைவர் பேராசிரியர் து.ஆ.தனபாண்டியன் அவர்களின் வாழ்த்துரையுடனும் தொடங்கப்பெற்ற இந்நிறைவு விழா, இறுதியில் நாடகத்துறை இணைப்பேராசிரியர் டாக்டர் மு. இராமசாமி அவர்கள் நன்றி கூற இனிதாக முடிந்தது.

பயிற்சியாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட 'வெறியாட்டு' என்ற அவலச் சுவை நாடகமும் 'பாதுகாவலர்' என்ற அங்கதச் சுவை நாடகமும் சிறப்பாக நடித்துக் காட்டப் பெற்றன. —நாடகத் துறை.

கணிப்பொறி நிறைவு விழா

"அறிவியல் தமிழ் வளர்ந்தால் தமிழன் வளர்வான்;
தமிழன் வளர்ந்தால் தமிழ் வளரும்; தமிழ்நாடு
செழிக்கும்".

— என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் 7-11-'86-இல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த 'நுண்கணிப் பொறிகளும், வழியமைப்பு மொழிகளும்' என்ற ஐந்து வாரச் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு நிறைவு விழாவில் கூறினார்.

பல்கலைக் கழக நல்கைக் குழுவின் உதவியுடன் 1-10-'86-இல் துவங்கிய இச்சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு 38 நாள் பயிற்சிக்குப் பிறகு பதிவாளர் திரு இர.ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நிறைவு விழாவைக் கண்டது.

வளர்தமிழ்ப்புலத் தலைவர் முனைவர் சீ.செ.தேக்கமலை அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சிறப்பு விருந்தினராக விழாவில் நிறைவுரையாற்றிப் பயிற்சி பெற்றோர்க்குச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

22 கல்லூரிப் பேராசிரியர்கள் 14 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், பொறியியலாளரும், ஆய்வாளருமாக 11 பேர் இப்பயிற்சியால் பயனடைந்து சான்றிதழ்களைப் பெற்றனர்.

விழாத் தொடக்கத்தில் கணிப்புமையப் பேராசிரியரும் பயிற்சிவகுப்பின் இயக்குநருமாகிய பேராசிரியர் கா.செ.செல்லமுத்து வருகை தந்தவரை வரவேற்றார்.

—கணிப்புமையம்.

சோவியத் அறிஞரது ஒப்பீட்டாய்வு

சோவியத் நாட்டு மாஃச்கோவில் உள்ள ராதுகா பதிப்பகத்தில் தமிழ் மொழிபெயர்ப்புத் துறையின்



தலைவராகிய முனைவர் விதாலி ஃபுர்னீக்கா தமிழ்ப் பல்கலைக் கழக அழைப்பின் பேரில் வருகை தந்து தேசியகவி சுப்பிரமண்யபாரதி —உக்கிரேயின் மகாகவி தராஸ் ஷெவ்சேன்கோ பற்றிய ஒப்பீட்டாய்வை மேற்கொண்டுள்ளார்.

ஆங்கிலம், உக்கிரேனியம், உருசியம், பல்கேரியம், செருமானியம் முதலிய மொழிகளை அறிந்த இவர் 1965-இல் லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலத் தொடங்கினார். 1970-இல் முனைவர் மு.வ. அவர்களிடம் தமிழ் இலக்கியங்களைப் பயின்றார். தமிழர் பண்பாடு பற்றி உருசிய மொழியில் இவரால் எழுதப்பட்ட நூல் 'பிறப்பு முதல் இறப்பு வரை' என்னும் தமிழ்மொழி பெயர்ப்பு நூலாக வெளிவந்துள்ளது. இதன் உருசிய மொழிப்பதிப்பு பத்து நாள்களில் 30 ஆயிரம் படிகள் விற்பனை ஆயின என்பது குறிப்பிடத் தக்கது.

நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே
ஆய்வு செய்வது எனக்குப்
பெருமையாக இருக்கிறது.
— வி. தாலி ஃபுர்னீக்கா

அகராதிக்கலைப் பணிப் பட்டறை

பல்கலைக் கழக நல்கைக்குழு நல்கையுடன் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொகுப்பியல்துறை நடத்தும் 21நாள் அகராதிக்கலைப் பணிப்பட்டறை 10-11-'86 காலை 10-00 மணியில் பதிவாளர் திரு இர. ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையில் தொடங்கியது. சமூகவியல் துறை பேராசிரியர் சீ.செ.தேக்கமலை அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயராய்வுமைய இயக்குநர் பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பணிப்பட்டறை இயக்குநர் பேரா.தா.வே.வீராசாமி அவர்கள் வரவேற்றார்.

—தொகுப்பியல் துறை.

இசைக்கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழக இசைத்துறையினர், பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையுடன் நடத்திய 'தமிழ் இயலிசைப் புலவர்களின் படைப்புகள்' (15- 19 நூற்.) என்ற நான்கு நாள் கருத்தரங்கு, 27-10-'86 முதல் 30-10-'86 வரை தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் நடைபெற்றது.

தொடக்கவிழாத் தலைமையுரையில்:

"இயலிசைப் புலவர்கள் நமக்களித்துள்ள இசை மரபைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்" என்று தமிழ்ப் பல்கலைக் கழக மதிப்புறு பேராசிரியர் டாக்டர் மதுரை எஃ.ச. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.

இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர. ஆலாலசுந்தரம் அவர்கள் உரையாற்றினார்.



இக்கருத்தரங்கில் இயலிசைப் புலவர்கள் பற்றிய 21 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. பார்வையாளர்களாக 25 கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

30-10-'86-இல் நிகழ்ந்த நிறைவு விழாவில் பதிவாளர் திரு இர. ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ஏ.என். பெருமாள் அவர்கள் நிறைவு விழா உரை நிகழ்த்தினார்.

இக்கருத்தரங்கின் இயக்குநர் பேரா. து.ஆ. தனபாண்டியன் தொடக்க விழாவில் வரவேற்புரை நிகழ்த்தி நிறைவு விழாவில் நன்றி கூறினார்.

—இசைத்துறை

அகழ்ப்பை

அகப்பை - இச்சொல் அகழ்ப்பை யென்பதின் மரூஉ; இது அன்னத்தைத் தோண்டும் கருவி. இது மரத்தினாலும், தேங்காயின் ஓட்டினாலும் செய்யப்பட்டது.

—அபிதான சிந்தாமணி பக்.6

புதன் வட்டக் கருத்தரங்கு

பல்கலைக் கழகப் புதிய வளாகத்திலுள்ள மொழிப் புலக் கருத்தரங்கு அறையில் 20-10-'86 அன்று மாலை 4-00 மணி அளவில் கருத்தரங்குக்கூட்டம் நடைபெற்றது. முனைவர் எஃ.ச. ஆரோக்கியநாதன், (இணைப்பேராசிரியர், மொழியியல்துறை) 'இருமொழியாளர்களிடம் தாய்மொழி தக்க வைத்தல்' எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையினைப் படித்தார். முனைவர் ப. அருணாசலம் அவர்கள் (சிறப்பு நிலைப் பேராசிரியர், தமிழ்த்துறை) இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

முதுமுனைவர் (D.Lit) பட்ட ஆய்வு

தமிழ்ப் பல்கலைக் கழகம் முனைவர் (Ph.D) பட்டம் பெற்றோர்க்கு முதுமுனைவர் (D.Lit) பட்டம் வழங்கும் ஆய்வுப் பதிவை ஏற்படுத்தியுள்ளது. பதிந்துள்ள முனைவர்கள் கீழ்வரும் பொருள்களில் ஆய்வுப் பணியை மேற்கொண்டு உள்ளனர்.

1. 'தமிழ் இலக்கியத்தில் அடிமைநிலை-கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை'
   —தா. ஈசுவரபிள்ளை —இலக்கியத்துறை
2. 'தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த நுண்கலைகள்' (கி.பி.1676-1855) —ம.சா. அறிவுடைநம்பி
   —அரிய கையெழுத்துச் சுவடித்துறை
3. 'மூவர் தேவாரத்தில் சிவபெருமான்'
   —அரு. மருததுரை —ஓலைச் சுவடித்துறை
4. 'தமிழில் சொல்லாக்கம்' — ஆ. கார்த்திகேயன்
   —அயல்நாட்டுக்கல்வித்துறை
5. 'தமிழில் அறிவியல் கலைச்சொற்களின் கருத்தமைவு — வரலாற்றாய்வு' —இராதாசெல்லப்பன்
   —மொழிபெயர்ப்புத் துறை
6. 'சங்க இலக்கியத்தில் பலபொருள் ஒரு சொல்' (பொருட் பன்மையும் பெயர்ப் பன்மையும்)
   —எச். சித்திரபுத்திரபிள்ளை —தொகுப்பியல்துறை
7. 'சங்க இலக்கியத்தில் ஒருபொருட் பன்மொழி —ஒரு பொருண்மை இயல் ஆய்வு' —பெ. மாதையன்
   —தொகுப்பியல்துறை
8. 'நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைப் பண்பாட்டில் சிறுதெய்வ வழிபாடு' —ஆ. இராமநாதன்
   —சமூகவியல் துறை
9. 'மாறிவரும் உறவுமுறைத் தொடர்புகள்' —கிராம சமுதாயத்தில் ஓர் ஆழ்நிலை ஆய்வு'
   —தா. இராபர்ட்சத்திய சோசப் —சமூகவியல் துறை
10. 'அமைப்பியல் நோக்கில் தமிழக நாட்டுப்புற நடனங்கள்' —கு. முருகேசன் —நாடகத் துறை
11. 'தமிழகத்தில் பொம்மலாட்டம்'
    சீ.மா. இரவிச்சந்திரன் —நாடகத் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/88

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர் - 613 005.

தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

வாழ்வியற் களஞ்சியம் மதிப்புரை

"சென்ற அரை நூற்றாண்டில் புதிய பரிமாணங்களுடன் வளர்ந்து சமூக விஞ்ஞானங்கள் என்று பெயர் பெற்ற மொழியியல், சமூகவியல், மனிதவியல், மேலாண்மை இயல் போன்ற அறிவுத் துறைகளில் அறிஞர் எழுதிய பல கட்டுரைகளைக் கொண்டுள்ளதால், இத்தொகுப்பு மிகப் பயனுள்ளமுறையில் அமைந்துள்ளதென்று பாராட்டுப் பெறற்கு உரியதாகும்."

நன்றி — தினமணி 20-10-'86.

மதிப்புரை

"கணிப்பொறி மொழியாகிய 'பேசிக் மொழி' பற்றியும் இந்த நாலில் விளக்கமாக எழுதப் பட்டுள்ளது.

கணிப்பொறியியலில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அந்தத் துறையில் பயிலும் மாணவர்களுக்கும் இந்த நால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்!"

நன்றி - தினமணி 13-10-'86

களஞ்சியம்

வெளியீட்டு என்	வாழ்வியற் களஞ்சியம்	விலை
53-1	தொகுதி-1	300-00
53-2	தொகுதி-2	300-00
63-1	அறிவியல் களஞ்சியம் தொகுதி-1	300-00

வெளியீட்டு என்	சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்	விலை
52-1	தொகுதி-1	250-00
52-2	தொகுதி-2	250-00

புதிய வெளியீடுகள்

வெளியீட்டு என்		விலை
64.	பெரியபுராணச் சிறப்புப் பெயர் அகராதி —தா.வே.வீராசாமி பக்.310	75-00
65.	இந்துத் திருமணச்சட்டம் —புலமை வேங்கடாசலம் பக்.149	48-00
70.	தமிழ் ஆட்சிமொழி ஒரு வரலாற்றுநோக்கு —துரை.சுந்தரேசன் பக்.372	95-00
72.	தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி 1 ஆங்கிலம்: ஈ.தர்ஸ்டன் தமிழில்: க.இரத்னம் பக்.584	150-00

அச்சில்

வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-3

1. தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு
   —பேரா.கே.எம்.வேங்கடராமையா
2. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்
   —புலவர் செ.இராசு
3. சங்க இலக்கியத் தாவரங்கள்
   —கு.சீநிவாசன்
4. சூரிய ஆற்றலும் பயன்களும்
   —மெ.மெய்யப்பன்
5. மரஇனப்பெயர்த் தொகுதி 2
   —பெ.மாதையன்
   —எச்.சித்திரபுத்திரன்

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.